இலக்கு 4.4 – 2030 ஆம் ஆண்டளவில் தொழில்வாய்ப்புகள், சிறந்த தொழில்கள் மற்றும் முயற்சியாண்மைக்காக தொழில்நுட்ப மற்றும் வாழ்க்கைத்தொழில் திறன்கள் உள்ளிட்ட தொடர்புடைய திறன்களைக் கொண்ட இளைஞர்களினதும் வயதுவந்தவர்களினதும் எண்ணிக்கையை குறிப்பிடத்தக்க அளவால் அதிகரித்தல்.

இலக்கு 4.5 – 2030 ஆம் ஆண்டளவில், கல்வியில் பால்நிலைசார்ந்த ஏற்றத்தாழ்வுகளை ஒழித்துக்கட்டல், மாற்றுத் திறனாளிகள், பூர்வீகக் குடிகள் மற்றும் ஆபத்தான சூழ்நிலைகளை எதிர்நோக்கக்கூடிய நிலையில் இருக்கின்ற பிள்ளைகள் உள்ளிட்ட அனைவருக்கும் அனைத்து மட்டங்களிலும் கல்வி மற்றும் வாழ்க்கைத் தொழிற்பயிற்சிக்கான சமமான அணுகுவழியை உறுதிப்படுத்துதல்.

இலக்கு 4. A – சிறுவர்கள், மாற்றுத் திறனாளிகள், பால்நிலை தொடர்பான கூருணர்வுள்ள விடயங்களையும் கவனத்திலெடுத்து கல்வி வசதிகளைக் கட்டியெழுப்புதலும் தரமுயர்த்துதலும் அனைவரையும் உள்ளடக்கக்கூடிய பாதுகாப்பான, அமைதியான, பயன்கூர் கற்றல் சூழல்களை ஏற்படுத்துதலும்.

இலக்கு 9.5 – விஞ்ஞான ஆராய்ச்சிகளை மேம்படுத்துதல், அனைத்து நாடுகளினதும் கைத்தொழில் துறைகளில் தொழில்நுட்ப ஆற்றல்களை தரமுயர்த்துதல், குறிப்பாக வளர்முக நாடுகளில், 2030 ஆம் ஆண்டளவில் புத்தாக்கங்களை ஊக்குவித்தல், ஒரு மில்லியன் மக்களுக்கு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி ஊழியர்களின் எண்ணிக்கையை ஒரு மில்லியன் பேருக்கு குறிப்பிடத்தக்க விதத்தில் அதிகரித்தல் மற்றும் அரச, தனியார் ஆராய்ச்சிகளும் அபிவிருத்திகளுக்குமான செலவுகள்.

2.1 உயர்கல்விக்கான அணுகல்

தொழில்நுட்ப நிறுவகம் புதிய இடமான தியகம வளவுக்கு எடுத்துச்செல்லப்பட்டதை அடுத்து ஆண்டுதோறும் மொத்த மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளலின் முன்னேற்றம் பற்றிய விபரம் அட்டவணை 01 இல் தரப்பட்டுள்ளது. மேலும், உரு 01 மற்றும் அட்டவணை 02 மூலம் ஒவ்வொரு பாடத்துறைக்கும் மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுதல், 2017 ஆம் ஆண்டை அடிப்படையாகக்கொண்டு முறையே ஆண்டுதோறும் மாணாக்கர்களை அதிகரிக்கும் சதவீதம் என்பன தெளிவுபடுத்தப்படுகின்றது. தொழில்நுட்ப நிறுவகமானது மொரட்டுவைப் பல்கலைக்கழகம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஆகியவற்றின் கீழ் இயங்குகின்ற ஒரு பகிரங்க நிறுவனமாகும். ஒரு பகிரங்க நிறுவனம் என்ற வகையில், அதன் அனைத்து டிப்ளோமா மாணாக்கர்களுக்கும் இலவசக் கல்வி வழங்குகின்றது. இது மேற்குறிப்பிட்ட பட்டியல்படுத்திய இலக்குகளை நிறைவேற்றி கட்டுப்படியானதும், பண்புத்தரம் வாய்ந்ததுமான தொழில்நுட்பக் கல்விக்காக ஆண்களுக்கும் பெண்களுக்கும் சமமான அணுகலொன்றை வழங்கும்.

இருப்பினும், மாணாக்கர்களின் சேர்த்துக்கொள்ளல் அதிகரிப்பதுடன் நிகழ்ச்சித்திட்டத்தின் பண்புத்தரத்தைப் பேணுவதற்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் பேண்தகு அபிவிருத்தியொன்றை அடைந்துகொள்வதற்கும் கல்விசார் மற்றும் கல்விசாரா பணியாட்டொகுதியை அதிகரிப்பது அவசியமாகும்.

அட்டவணை 01 – தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டத்திற்கு மாணாக்கர்களைச் சேர்த்துக்கொள்வதிலான முன்னேற்றம்

சேர்த்துக் கொள்ளல்	ஆண்டு											
	2017	அதிகரிப்பு	2018	அதிகரிப்பு	2019	அதிகரிப்பு	2020	அதிகரிப்பு	2021	**அதிகரிப்பு**	2022	**அதிகரிப்பு**
முதலாம் ஆண்டு	350	-	480	37	800	67	800	-	799		795	67
இரண்டாம் ஆண்டு	350	-	350	-	480	37	800	67	800		799	67
மூன்றாம் ஆண்டு	350	-	350	-	350	-	480	37	800	67	800	67



உரு 01 – ஒவ்வொரு பாடத்துறைக்கும் மாணாக்கர்களைச் சேர்த்துக்கொள்வதிலான முன்னேற்றம்: *ஊர் - இரசாயன, ஊஐ - சிவில், இ நுடு - மின், நுவு - இலத்திரனியல், ஆநு – பொறிமுறை, ஆவு - கடல்சார், ளுே - கப்பல்துறை, ீவு - பொலிமர், வுவு – புடவை, ஐவு - தகவல் தொழில்நுட்பம்*

அட்டவணை 02 – ஒவ்வொரு பாடத்துறைக்கும் மாணாக்கர்கள் சேர்த்துக்கொள்ளப்படும் சதவீதத்தை அதிகரித்தல்

பாடத் துறை	ஆண்டு					
	2017	2018	2019	2020	2021	2022
இரசாயன	25	30	50	50	50	50
சிவில்	80	120	200	200	200	200
மின்	40	60	100	100	100	100
இலத்திரனியல்	40	60	100	100	100	100
பொறிமுறை	60	80	100	100	100	100
கடல்சார்	15	20	20	20	19	20
கப்பல்துறை	15	20	20	20	20	20
பொலிமர்	25	30	50	50	50	45
புடவை	50	60	60	60	60	60
தகவல் தொழில்நுட்பம்	-	-	100	100	100	100
மொத்தம்	**350**	**480**	**800**	**800**	**799**	**795**

2.2 உயர்கல்வியின் பண்புத்தரமும் ஏற்புடைமையும்

மொரட்டுவைப் பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவகத்தை வேறிடத்தில் மீள நிறுவுவதன் மூலம் மாணாக்கர்களுக்கு மிக வசதியான விரிவுரை மண்டபங்கள், நவீன உபகரணங்களுடன் கூடிய ஆய்வுகூடங்கள், நூலகம், பரிபூரணமான தேகப்பியாச நிலையம் மற்றும் ஓய்வாக இருக்கக்கூடிய சூழலினூடாக பண்புத்தரம் வாய்ந்ததும், கட்டுப்படியானதுமான ஒரு கல்வியை வழங்குவதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. மேலும் அட்டவணை இலக்கம் 01, அட்டவணை இலக்கம் 02 ஆகியவற்றில் காட்டப்பட்டுள்ளவாறு தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா கற்கைநெறியைத் தொடரும் மாணாக்கர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு இதன் மூலம் வாய்ப்பு கிடைக்கும். அது மாத்திரமன்றி, அழகியல்சார் கல்வி மற்றும் விளையாட்டுக் கல்வி மொடியூல்கள் மூலம் மாணாக்கர்களின் வாழ்க்கைப் பாணியையும் பண்புத்தரத்தையும் மேம்படுத்துவதற்கும் அது உதவும். கற்றல் போன்றே இந்த மொடியூல்களின் கீழ் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள நிகழ்வுகள், நாட்டின் எல்லாத் திசைகளிலிருந்தும் வருகை தந்துள்ள மாணாக்கர்களுடன் சமூகத் தொடர்பை அதிகரிப்பதற்கு உதவும்.

எவ்வாறாயினும், எதிர்பாராத விதமாக கொவிட்-19 தொற்றுநோய் நிலைமை ஏற்பட்டுள்ளதன் காரணமாக 2021 ஆம் ஆண்டு ஏனைய உயர்கல்வி நிறுவகங்களுக்கும் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கும் சவால் மிகுந்த ஓர் ஆண்டாக அமைந்துள்ளது. முதல் தடவையாக தொடர்ரர (ழுடெைநெ) கற்பித்தல், கற்றல் (வுருடு) சூழலில் பிரவேசித்த சில பணியாட்டொகுதி அங்கத்தவர்களுக்கும் அனைத்து மாணாக்கர்களுக்கும் சவாலான ஒரு காலப்பகுதிக்கு முகங்கொடுக்க நேறிட்டது. அதன்படி, இவ்வறிக்கையின் மூலம் எமது பலங்கள், கொவிட்-19 தொற்றுநோய் காலப்பகுதியில் அனுபவித்த பலவீனங்கள், தொடர்ரா விரிவுரைகளை நடாத்தும்போது முகங்கொடுத்த சிரமங்கள், எதிர்காலத்தில் அவ்வாறானதொரு நிலைமையைத் தடுத்துக்கொள்வதற்குத் தேவைப்படும் வசதிகள் எவை? போன்ற விடயங்கள் மேலெழும்.

டிப்ளோமா கற்கைநெறிக்கு அனுமதி பெறும் மாணாக்கர்கள் நாட்டின் பல்வேறு பாகங்களிலிருந்தும் இடங்களிலிருந்தும் வருகை தருகின்றனர். கற்கைகளிலிருந்து தெளிவாகும் விடயம் யாதெனில், சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணாக்கர்களில் கணிசமானவர்கள் மிகக் குறைந்த சிறப்புரிமைகளை பெற்றுள்ளவர்கள் என்பதாகும். மேலும், மாணாக்கர்கள் தொடர்ந்தும் தொடர்பாடல் மார்க்கங்கள் பற்றிய பிரச்சினைக்கு முகங்கொடுத்தனர். ஆதலால், தொடர்ரா விரிவுரைகளை ஒப்படைத்தல் என்பது பணிக்குழுவினருக்கு சவால் மிகுந்த காரியமாக இருந்தது. அது மாத்திரமன்றி, குறுகிய ஒரு காலத்திற்கு சில மொடியூல்களுக்கான விரிவுரைகளை நடாத்துவதை இடைநிறுத்துவதற்கு அனுப்பிவைக்கப்பட்ட ஒலிப்பதிவு செய்வதற்கான வசதியின்மை எவ்வாறிருப்பினும் அத்தொற்றுநோய் நிலைமைக்கு மத்தியிலும் விரிவுரைகளை நடாத்துவதற்கு மாணாக்கர்களுக்கு அவர்களின் கற்றலில் உதவுவதற்கும் முயற்சி எடுத்துக் கொண்டனர்.

எதிர்பாராத நிலைமைக்கு மத்தியில் மானியங்கள் தேவைப்பட்ட மாணாக்கர்களை (நிதி ரீதியாக அல்லது வேறு வகையில்) அடையாளம் காண்பதற்கு பிரிவுகளினால் அளவாய்வுகள் மேற்கொள்ளப்பட்டதுடன், தொடர்ரா கற்றல் செயற்பாடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும்போது அவர்களுக்கு இருந்த தடங்கல்கள் எமக்கு தொடர்ரா கற்றல் செயன்முறையின்போது மாணாக்கர்கள் எதிர்நோக்கிய பல்வேறு பிரச்சினைகளை இனங் காணக்கூடியதாக இருந்தது. உதாரணமாக:- பலவீனமான தொடர்பாடல், தரவு அட்டைகளைக் கொள்வனவுசெய்வதற்கு முடியாத நிலை, அவர்களின் பிரதேசங்களில் தரவு அட்டைகளின் வழங்கல் மட்டுப்படுத்தப்பட்டதாக இருந்தமை, இணையத்தில் சஞ்சரிப்பதற்கு ஸ்மார்ட் கையடக்கத் தொலைபேசி வசதியின்மை, குடும்ப வருமானநிலையில் காணப்பட்ட தடங்கல்கள் காரணமாக ஏற்பட்ட சிரமங்கள், சில செயற்பாடுகள் கொவிட்-19 நிலைமை காணப்பட்ட காலப்பகுதியில் சிவில் பொறியியல் தொழில்நுட்பப் பிரிவு மாணாக்கர்களுக்கு வழங்கப்பட்டுள்ள வசதிகள் என்பன இங்கு காட்டப்பட்டுள்ளன.

அதற்கிணையாக ஏனைய பிரிவுகளின் பணியாட்டொகுதியினராலும் மாணாக்கர்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டன.

அந்த அடிப்படையில், இணையவழி விரிவுரைகளை நடாத்துவதற்கு தொழில்நுட்ப நிறுவகத்திற்கு பரிபூரணமான ஒலிப்பதிவுசெய்வதற்கான வசதிகளுடன்கூடிய ஓரிடம் தேவைப்படுகின்றது என்பதை நாம் இனங்கண்டுள்ளோம். வெகு விரைவில் தொலைக்கல்வி வடிவிலான கற்கைநெறிகளை வழங்கும்போது இணையத்தினூடாக விரிவுரைகளை நடாத்துவதற்கான இவ்வசதி ஒரு வரப்பிரசாதமாக அமையலாம். மேலும், கணிசமான மாணாக்கர்கள் அவர்களின் ஸ்மார்ட் கையடக்கத் தொலைபேசி வாயிலாகவே விரிவுரைகளில் இணைந்து கொண்டனர். இருப்பினும், மாணாக்கர்களுக்கு மடிமேல் கணினிகளைக் கொள்வனவு செய்வதற்கான கடன் திட்டமொன்று காணப்படுமாயின், அது பயனுள்ளதாக அமையும் என்பதுடன் எந்தவொரு சிரமமுமின்றி அவர்களின் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அவர்களுக்கு உதவியாக அமையும் என்பதை நாம் இனங்கண்டுள்ளோம்.

குறுகிய காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட இணையவழி தொடரரா விரிவுரைகள் (கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை காரணமாக) மேற்கொள்ளும் முறை முறைப்படியாக அமுல்படுத்தப்படுமாயின், தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா கற்கைநெறியைக் கட்டியெழுப்புவதற்கு தொடரரா விரிவுரைகள் உதவும் என்பதை நாம் உணர்ந்தோம். இது ஒரு புது யுகத்தின் தோற்றமாகும்.

தொடரரா விரிவுரைகள், வு மற்றும் டு உடன், 2030 ஆம் ஆண்டுக்கு முன்னரும் கூட நிரற்படுத்திய இலக்குகள் சிலவற்றை எய்த முடியுமென நாம் எதிர்பார்க்கின்றோம்.

- ஐஉெசநயளந வாந வையெமந னசயஅயவஉையடடல வழ அயவஉா றவைா வாந னைெரளவசல சநஙரசைநஅநவெ
- சுநஙரசைநஅநவெள ழக அைைஅயட சநளளைநவெயைட கயஉடைவைநைள - வுாளை றழரடன ிசழஅழவந டநளள சளைம.்.ளயகந நளெசைழஅெநவெ யனெ நயளல வழ ிசழளனைந ளவரனநவெ கயஉடைவைநைள றவைா ாபைா ஙரயடவைல
- சுநனரஉவைழெ ழக நநெசபல உழளெரஅிவைழெ ிநச ளவரனநவெ
- ழுநெ ழக வாந அயதழச டியசசநைசள யவ வாந ிசநளயடைலைபெ ளவைரயவழைெ வழ சநயஉா வாந நஒிநஉவநன வயசபநவ ளை ளாழசவயபந ழக ளவயகக. ஐயெனநஙரயவந கரனெ யடடழஉயவழைெ ாயள சநளரடவநன ை ளடழறநச ிசழபசநளள ழக சநஉசரவைஅநவெ. ர்ழறநளநசஇ ழடெைநெ வு ரூ டு நளெசைழஅெநவெ பயளந ரள யெ னைநயட ஞிழசவரவைல வழ னநடளைநச டநஉவரசநள ளரஉஉநளளகரடடல.

2.3 ஞரககளைஉறைநெஉல ைை ஆயயெபநஅநவெ ஞலளவநஅள

வூந வநயஅ ாயளந னைநவெகைநைன ளழஅந ழுவாநச வயசபநவளஇ வாயவ யசந யஉாநைஎயடிடந வாசழரபா ய உயசநகரட ளநஎவைபெ ழக யஉவழைெ ிடயளெ. குழச iளெவயஉெநஇ ிசழஎனைபெ ளயகநஇ ழெ-எழைடநவெ யனெ நககநஉவளைந டநயசniபெ நளெசைழஅநவெ (வுயசபநவ 4.யு) யனெ யஉஉநளள வழ யககழசனயடிடநஇ சநடயைடிடநஇ ளரளவயiயெடிடந யனெ அழனநசெ நநெசபல ளநசஎைஉநள (வுயசபநவ 7.1) (ருNஇ 2019இ 17புழயடள 2019). குழைபெ ழக ஊஊவுஏ உயஅநசயள றாநசந நெஉநளளயசல றழரடன ிசழஎனைந ய ளயகநச நளெசைழஅநவெ கழச வாந ளவரனநவெள யனெ நஅிடழலநநள யவ வாந ஐவுருஆ வழ ய பசநயவ நஓவநவெ. ர்ழறநஎநசஇ ைை ழசனநச வழ யஉஉழஅஅழனயவந ழுவாநச கயஉடைவைநைள ளரஉா யள சநநெறயடிடந நநெசபல ைை வாந ிசநஅளைநள யெ யஉவழைெ ிடயெ நெநனள வழ டிந னநஎநடழிநன யனெ யடடழஉயவந ளழஅந கரனௌ ைை நெஓவ கநற லநயசள.

2.4 ஆராய்ச்சி, புத்தாக்க மற்றும் அறிவுப் பரிமாறல்

புதிய பாடவிதான மாற்றத்துடன் அனைத்துப் பாடங்களுக்கும் கருத்திட்ட மொடியூல் ஒன்று சேர்க்கப்பட்டுள்ளது. கருத்திட்ட மொடியூலொன்றை அறிமுகம்செய்வதன் மூலம் கருத்திட்ட∴ ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முதன்மையான மட்டத்தில் புத்தாக்கக் கருத்துக்களைப் பரீட்சித்துப் பார்ப்பதற்கான வழிவகை திறந்து விடப்படுகிறது. மாணவர் கருத்திட்டத்தின் கண்டுபிடிப்புக்கள் பரந்த சமூகமொன்றுக்கு, கருத்தரங்குகள், கருத்தரங்குகள்.∴கண்காட்சிகள் மூலம் எடுத்துச் செல்லப்படலாம் என்பதுடன் அதன் மூலம் தேசிய சேவையொன்றை நிறைவேற்றுவதற்கு தொடர்ந்தும் இயலுமை பெறலாம். இருப்பினும், பரீட்சார்த்தங்கள், பண்புத்தரமுள்ள தரவுகளைச் சேகரித்தல், கண்காட்சிகளை நடாத்துதல் ஆகியவற்றுக்கு பொருள்களைக் கொள்வனவுசெய்வதற்கு மாணாக்கர் கருத்திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடுசெய்வது அவசியமாகும்.

3.0 குரனௌ கழச ைஇடநஅநவெைபெ ளுனுபுள

குழடடழறபைெ வயடிடந ளரஅஅயசணைநள வாந யீசழழஓைஅயவந டிரனபநவ நளவiஅயவநள ரனெநச வாந டளைவநன கழரச அயதழச ிழடiஉைநைள.

ீழடiஉல யசநய	நுளவiஅயவநன டீரனபநவ (சுள.) ஆழ	சுநஅயசமள
1. யுஉஉநளள வழ ர்பைாநச நுனரஉயவழைெ 2. ஞரயடவைல யனெ சநடநஎயஉந ழக ர்பைாநச நுனரஉயவழைெ	• 3, 800, 000.00	• சுநஉசரவைபெ யுஉயனநஅஇை ரூ ழேெ-யஉயனநஅஇை ளவயகக. • எனைநழ உழகெநசநஉந ளவரனழை(கழச ழுடெைநெ வுருடு)
3. ளுரகககைஉநைஉல ைெ ஆயயெபநஅநவெ ளலளவநஅள	• 358, 000, 000.00	• குழைைபெ ளரளவயயைெடிடந யனெ அழனநசெ நநெசபல ளநசஎைஉநள (நப. ஊழஅளெைநசைபெ வழ ளைளெவயடட சநநெறயடிடந நநெசபல ஞநளநடழிஅநவெ ிடயவெ) யனெ ளநஉரசவைல ஊஊவுஏ உயஅநசயள.
4. சுநளநயசஉா இ ைெெழஎயவழைெ யனெ ஐஇயசவைபெ மழெறடநனபந	• 3,000,000.00	• குரனௌ கழச ளவரனநவெள' சநளநயசஉா ிசழதநஉவள யனெ ைஇயசவைபெ மழெறடநனபந கயஉடைவைநைள.

*** Not received during 2022**

References:

1. Department of census and Statistics (DCS), Sri Lanka (2017), *Status of Sustainable Development Goals indicators in Sri Lanka: 2017*, Ministry of National Policies and Economic Affairs, Sri Lanka, URL: <http://www.statistics.gov.lk/sdg/application/publications/book.pdf>. [Viewed date: 19.02.2019].
2. 17Goals (2019), *The 2030 agenda for sustainable development*, URL: <http://17goals.org/>. [Viewed date: 19.02.2019].

17. ஆண்டுக்கான நிதிக்கூற்றுகள் - 2022

தொழிநுட்பவியல் நிறுவகம் - மொறட்டுவைப் பல்கலைக்கழகம்
2022 திசம்பர் 31ஆம் திகதியன்றிருந்தவாறான நிதி நிலைமையின் கூற்று

சொத்துக்கள்	**குறிப்புக்கள்**	**2021 ரூ**	**2021 ரூ**	**2022 ரூ**	**2022 ரூ**
நடைமுறைச்சொத்துக்கள்					
வங்கியிலுள்ள பணம்	1	10,569,474		22,299,161	
பெற வேண்டியவை	2	18,255,460		21,964,927	
கையிருப்பு		6,209,491		5,397,799	
முன்கொடுப்பனவுகள்	3	259,977		484,407	
முதலீடுகள் (குறுந்தவணை)		0	**35,294,402**	0	**50,146,294**
நடைமுறையில்லாச்சொத்துக்கள்					
முதலீடுகள் (நெடுந்தவணை)	4	17, 878,175		21,720,334	
சொத்து, பொறித்தொகுதியும் சாதனமும்	5	7,622,358,101		6,939,135,935	
முதலீடுகள் (சொத்து)	6			153,992,181	
நூலக புத்தகங்கள் மற்றும் நாளிதழ்கள்	7			1,125,655	
பிறசொத்துக்கள்	8	3,974, 921		2,580,097	
			7,644,211,197		**7,118,554,202**
மொத்தச் சொத்துக்கள்			**7,679,505,599**		**7,168,700,496**
கடன் பொறுப்புக்கள்					
நடைமுறைக்கடன் பொறுப்புக்கள்					
செலுத்த வேண்டியவை	9	14,117,317		19,535,189	
தள்ளிப்போட்ட வருமானம்	10	1,612,496		2,632,996	
திரண்ட செலவுகள்	11	36,056,412	51,786,225	46,617,283	68,785,468
நடைமுறையில்லாக் கடன் பொறுப்புக்கள்					
					30,620
பணிக்கொடைக்கான ஏற்பாடு			84,333,323		82,333,323
மொத்தக் கடன் பொறுப்புக்கள்			**(136,119,548)**		**(151,558,776)**
மொத்த நிகரச் சொத்துக்கள்			**7,543,386,051**		**7,071,141,720**
நிகர்ச் சொத்துக்கள் கட்டணங் குறைந்த நிகர மதிப்பீடு					
மூலதன மானியம் செலவு செய்தல்	12	13	9,882,328		12,674,392

மூலதன மானியம் செலவிடாத	13	14	(174,573,095)		(170,824,068)
பொது ஒதுக்கம்	14	15			(18,959,131)
	15	16			(679,780,848)
	16	17	4,244,369		269,369
நன்கொடைகள்	17	18	7,341,686		91,686
பணமில்லா அரச மானியம்	18	19	72,114,201		82,551,622
திரண்ட நிதியம்	19		5,428,424		10,498,355
மீள்மதிப்பீட்டு மிகை				**7,543,386,056**	
				7,543,386,056	
மொத்த நிகரச் சொத்துக்கள் ∴ கட்டணங்குறைந்த நிகர மதிப்பீடு		13	9,882,328		12,674,392

பக்கங்கள் 34 தொடக்கம் 41 வரையான பக்கங்களில் காணப்படும் குறிப்புக்கள் நிதிக்கூற்றின் முழுமையான பாகமாகும்.
இந்நிதிக்கூற்றினைத் தயாரித்துச் சமர்ப்பிப்பதிலான முழுப்பொறுப்பும் முகாமைத்துவச்சபையின் பொறுப்பிலேயே உள்ளது.
நிறுவகத்தின் முகாமைத்துவச் சபையின் சார்பிலும் சபைக்காகவும் பின்வருவோரால் அங்கீகரிக்கப்பட்டு கையொப்பமிடப்பட்டுள்ளது.

தொழிநுட்பவியல் நிறுவகம் - மொறட்டுவைப் பல்கலைக்கழகம்
2022 திசம்பர் 31இல் முடிந்த ஆண்டுக்கான நிதிச் செயற்பாடுகளின் கூற்று

	குறிப்பு	2021 ரூ	2022 ரூ
இயக்கும் வருமானம்			
மீண்டுவரும் மானியம்		453,500,000	505,233,000
அரச மானியம் - மகாபொல		645,000	0
அரச மானியம் - கல்வித்துணைப் பணம்		41, 952,000	28,376,000
ஆராய்ச்சியை வலுப்படுத்துவதற்கான மானியம்		219,500	200,000
ஏனைய வருமானம் (தண்ட வரி & மிகைவரி)	20		55,947
பரிமாற்றம் அல்லாத பரிவர்த்தனை மூலமான வருமானம் - மீள்வரு			**533,864,947**
மூலதன மானியம்			**4,357,936**
பரிமாற்றம் அல்லாத பரிவர்த்தனை மூலமான மொத்த வருமானம்			**538,222,883**
பரிமாற்றம் அல்லாத பரிவர்த்தனை மூலமான வருமானம்			
ஒதுக்கீடுகள், ஆலோசனை சேவைகள், குறுங்கால கற்கை நெறிகள் மூலமான வரவுகள்		1,856,792	2,186,565
பிற வருமானம்	21	14,097,399	21,697,067
கடன் தீர்த்தல்		679,210,324	0
சொத்துக்களை அகற்றுவதில் இலாபம் /(நட்டம்)		0	11,053
பரிமாற்ற பரிவர்த்தனை மூலமான மொத்த வருமானம			23,894,685
மொத்த வருமானம்			562,117,568
இயங்கும் / தொழிற்பாட்டு வரவுகள்			
மீள்வரு வருமானம்			
No Exchange			533,864,947
Exchange			23,894,685
மொத்தம			**557,759,632**
இயக்கும் செலவுகள்			
சொந்த வேதனாதிகள்	22	363,871,923	408,942,110
பிரயாணம்	23	56,306	358,875
வழங்களும் பாவித்த நுகர்பண்டங்களும்	24	9,629,804	17,698,960
பேணல்	25	17,202,277	10,053,097
ஒப்பந்தம்சார் சேவைகள்	26	94,190,190	96,269,609
ஆராய்ச்சியும் அபிவிருத்தியும்	27	521,620	844,999
தேய்மானம் மற்றும் கடன்தீர் செலவுகள்		678,856,926	
பிற இயக்கச் செலவுகள்	28	7,368,843	11,708,239
மஹாபொல		645,000	0
கல்வித்துணைப் பணம்		41,952,000	28,376,000
ஆராய்ச்சியை வலுப்படுத்துவதற்கான செலவுகள்		219,500	200,000
தகுதி வளர்ப்பதற்கான செலவுகள்		1,856,792	2,186,565
இடப்பெயர்ச்சி மற்றும் அபிவிருத்திக் கருத்திட்டங்கள்			80,309
மொத்த இயக்கச் செலவுகள்		**1,216,381,181**	**576,718,763**
		(24,900,166)	**(18,959,131)**
பரிமாற்றம் அல்லாத வருமான மூலதன மானியம்			4,357,936
தேய்மானம் மற்றும் தேய்மான செலவுகள்			(684,138,784)
மூலதன மானியம் அல்லது நிதி ஆண்டுக்கு பிறகு மிகை/(பற்றாக்குறை)			**(679,780,848)**
நிதி ஆண்டுக்கான மொத்த மிகை/(பற்றாக்குறை)		**(24,900,166)**	**(679,780,848)**

Major General (SK) Thirunavukarasu/ Director	**Prof. KTMU Hemapala Member - BoM**	**Mr. ND Kuruppuarachchi Deputy Registrar**	**Mrs. SPD Peiris Senior Assistant Bursar**

தொழிநுட்பவியல் நிறுவகம் - மொறட்டுவைப் பல்கலைக்கழகம்

2022ஆம் ஆண்டு திசம்பர் 31இல் முடிந்த ஆண்டுக்கான நிகரச் சொத்துக்களிலான மாற்றங்களின் கூற்று

	குறிப்புக்கள்	10 மூலதன மானியம் செலவிட்டது ரு	11 செலவிடப்படாத மூலதன மானியம் ரு	12 பொது ஒதுக்கம் ரு	13	14	15 நன் கொடைகள் ரு	16 பணமில்லாத அரச மானியம் ரு	17 திரண்ட நிதியம் ரு	மீள் மதிப்பீடு மிகை ரு	மொத்தம் ரு
2020 திசம்பர் 31 அன்று நிலுவை		**8,294,893,755**	**9,857,047**	**155,578,695**			**4,093,286**	**7,250,000**	**63,794,147**	**2,917,604**	**8,227,227,144**
நிதிச்செயற்பாட்டுக் கூற்றில் எண்பிக்கப்படாத நிகர இலாபங்களும் நட்டங்களும்			(5,272,719)	5,905,766							633,047
மாற்றங்கள் ∴ நிகர அசைவுகள்		5,053,220	5,298,000				151,083	91,686	8,320,054	2,510,820	21,424,863
கடன் தீர்த்தல் மிகை ∴ குறை காலத்துக்கான				(24,900,166)							(24,900,166)
		(680,998,837)									686,271,556
2021 திசம்பர் 31 அன்று நிலுவை		**7,618,948,138**	**9,882,328**	**174,573,095**			**4,244,369**	**7,341,686**	**72,114,201**	**5,428,424**	**7,523,386,051**
மிகை ∴ சொத்துக்கள் மீள் மதிப்பீட்டின் போது குறை											
மாற்றங்கள் ∴ நிகர அசைவுகள்		161,601,800	7,350,000				(3,975,000)	(7,250,000)	10,437,421	5,069,931	173,234,152
நிதிச்செயற்பாட்டுக் கூற்றில் கணக்கில் காட்டப்படாத நிகர இலாபங்களும் நட்டங்களும்	29			3,749,027							3,749,027
		70,405									70,405
			(4,557,936)								(4,557,936)
கடன் தீர்த்தல் மிகை ∴ குறை காலத்துக்கான				(18,959,131)	(679,780,848)					(698,739,979)	(18,959,131)
2022 திசம்பர் 31 அன்று நிலுவை		**7,780,620,343**	**12,674,392**	**(170,824,068)**	**(18,959,131)**	**(679,780,848)**	**269,369**	**91,686**	**82,551,622**	**10,498,355**	**7,017,141,720**

Major General (SK) Thirunavukarasu
Director

Prof. KTMU Hemapala
Member - BoM

Mr. ND Kuruppuarachchi
Deputy Registrar

Mrs. SPD Peiris
Senior Assistant Bursar

தொழிநுட்பவியல் நிறுவகம் - மொறட்டுவைப் பல்கலைக்க
2022 திசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான பணவோட்டத்தின் கூற்று

	குறிப்புகள்	2021		2021	
		ரூ	ரூ	ரூ	ரூ
இயக்க நடவடிக்கை வழியான பணவோட்டம்					
மிகை ∴ சாதாரண நடவடிக்கை மூலமான (குறைபாடு)		(24,900,166)		(698,739,979)	
காசில்லா அசைவுகள்					
தேய்மானம்		678,856,926		679,780,848	
கடன்தீர்ப்பு		(679,210,324)			
அதிகரிப்பு (வீழ்ச்சி) பணிக்கொடைக் கான ஏற்பாடு		3,177,113		6,466,057	
பிற சரிக்கட்டல்கள்	**30**	6,266,161		8,691,501	
சொத்து விற்பனை மூலம் இலாபம்		0			
தொழிற்பாடு மூலதனத்தில் அதிகரிப்பு ∴ வீழ்ச்சி					
(வீழ்ச்சி) வரவேண்டியவற்றில் அதிகரிப்பு	**31**	423,634		(3,122,205)	
தள்ளிப்போட்ட வருமானத்தில் (அதிகரிப்பு ∴ வீழ்ச்சி)		(935,547)		1,020,500	
செலுத்த வேண்டியவற்றில் (அதிகரிப்பு ∴ வீழ்ச்சி)	**32**	(1,257,134)		5,448,492	
திரண்ட செலவுகளில் (வீழ்ச்சி ∴ அதிகரிப்பு)		13,813,607		10,560,871	
இயக்கும் நடவடிக்கைகளிலிருந்து நிகர பணவோட்டம்			**(3,765,730)**		**10,106,085**
முதலீடு செய்யும் நடவடிக்கை களிலிருந்து பணவோட்டம்					
பொறித்தொகுதியும் சாதனமும் கொள்ளல் (அட்டவணை டி, சி)		(5,053,219)		(4,465,967)	
காணிக்கான கொடுப்பனவு (மூலதனம்)		(219,500)		(200,000)	
வேறு கருத்திட்டங்களுக்கான கொடுப்பனவு				(8,056,693)	
சொத்துக்கள் விற்பனை		3,750		6,500	
முதலீடுகள் அதிகரிப்பு				394,500	
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து நிகர பணவோட்டம்		(1,676,765)		(3,842,159)	
நிதியளித்தல் நடவடிக்கைகளிலிருந்து பணவோட்டம்			**(6,945,734)**		**(16,163,819)**
மூலதன மானியம்	**13**	5,298,000		7,350,000	
வரையறுக்கப்பட்ட நிதிகளுக்கான ரசீதுகள்		8,319,954		10,437,421	

நிதி நடவடிக்கைகளிலிருந்து நிகர பணவோட்டம்			**13,617,954**		**17,787,421**
பணம் மற்றும் பணத்திற்கு நிகரானவைகளின் நிகர அதிகரிப்பு / (குறைவு)			**(2,906,490)**		**11,729,687**
பணம் மற்றும் பணத்திற்கு நிகரானவைகளின் ஆரம்ப இருப்பு			**7,662,984**		**10,569,474**
	33		**10,569,474**		**22,299,161**

Major General (SK) Thirunavukarasu **Director**	**Prof. KTMU Hemapala** **Member - BoM**	**Mr. ND Kuruppuarachchi** **Deputy Registrar**	**Mrs. SPD Peiris** **Senior Assistant Bursar**

- **(கணக்குக் குறிப்புகளுக்குரிய எல்லா விபரங்களும் ஆங்கிலப் பிரதியில் தரப்பட்டுள்ளது**

18. தேசிய கணக்காய்வு அலுவலகம்

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
யுேவுஐழுயுேடு யுருனுஐவு ழுகுகுஐஊநு

எனது இல: ர்நுனு.்.ஊ.்.ஐவுருஆ.்.6.்.22.்.2.்.குயு **திகதி:** 2023 மே மாதம் 31 ஆம் திகதி

பணிப்பாளர்,
தொழில்நுட்ப நிறுவகம் - மொறட்டுவைப் பல்கலைக்கழகம்

மொறட்டுவைப் பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவகத்தின் 2022 திசெம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களும், பிற சட்ட மற்றும் ஒழுங்குறுத்துகைத் தேவைப்பாடுகளும் குறித்த 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவிற்கு அமைவான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.

1. **நிதிக் கூற்றுக்கள்**

1.1 **அபிப்பிராயம்**

மொறட்டுவைப் பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவகத்தின் 2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதிநிலைக் கூற்று, அன்றைய தினம் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, உரிமைமாற்றக் கூற்று, அன்றைய தினம் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசினது அரசியலமைப்பினது 154(1) ஆம் உறுப்புரையினதும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் ஏற்பாடுகளைப் பின்பற்றி எனது பணிப்பின் கீழ் கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்டது. அரசியலமைப்பினது உறுப்புரை 154(6) இற்கு அமைவான எனது அறிக்கை, காலக் கிரமத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

நிறுவனத்தின் நிதிக் கூற்றுக்களின் ஊடாக 2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதியில் உள்ளவாறான நிதிநிலை, அன்றைய தினம் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயற்பாடு, காசுப்பாய்ச்சல்கள் என்பன இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான ஒரு நிலைமையைப் பிரபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புடைமையானது இவ்வறிக்கையின் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புடைமை என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்குமுகமாக என்னால் பெறப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியனவும் பொருத்தமானவையுமாகும் என்பது எனது நம்பிக்கையாகும்.

1.3 நிறுவகத்தின் 2022 ஆண்டறிக்கையில் அடங்கியுள்ள ஏனைய தகவல்கள்

இக்கணக்காய்வு அறிக்கைத் திகதிக்குப் பின்னர் நான் வழங்க எதிர்பார்க்கும் நிறுவகத்தின் 2022 ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளபோதும் நிதிக் கூற்றுக்களிலும் அது பற்றிய எனது கணக்காய்வு அறிக்கையிலும் உள்ளடங்காத தகவல்கள், ஏனைய தகவல்கள் என்பதால் கருதப்படும். இந்த ஏனைய தகவல்களுக்கு முகாமைத்துவம் பொறுப்பாதல் வேண்டும்.

நிதிக் கூற்றுக்கள் பற்றிய எனது அபிப்பிராயத்தின் மூலம் ஏனைய தகவல்கள் உள்ளடக்கப்படவில்லை என்பதோடு, அது பற்றிய எந்தவோர் உறுதிப்படுத்தலையும் அல்லது அபிப்பிராயத்தையும் நான் வெளியிடவில்லை.

மேலே இனங்காணப்பட்ட ஏனைய தகவல்களைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தபோது வாசித்தல் மற்றும் அவ்வாறு செய்யும்போது ஏனைய தகவல்கள் நிதிக் கூற்றுக்களுடன் அல்லது கணக்காய்வின் போது அல்லது வேறு வகையில் பெற்றுக்கொண்ட எனது அறிவுக்கெட்டிய வரையில் பொருண்மையான விதத்தில் பொருந்தவில்லையா என்பதைப் பரிசீலிப்பதே நிதிக் கூற்றுக்கள் பற்றிய எனது கணக்காய்வு தொடர்பிலான எனது பொறுப்பாகும்.

நிறுவகத்தின் 2022 ஆண்டறிக்கையை வாசிக்கும் போது, அதில் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் காணப்படுவதாக நான் முடிபுசெய்வேனாயின், சீர்செய்வதற்காக அவ்விடயங்கள் பற்றி கட்டுப்பாட்டுத் தரப்புகளுக்கு அறிவிக்கப்பட வேண்டும். மேலும் சீர்செய்யப்படாத பிறழ்கூற்றுக்கள் காணப்படுமாயின், அரசியலமைப்பின் 154(6) உறுப்புரைக்கு அமைய என்னால் காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் அறிக்கையில் அவை சேர்க்கப்படும்.

1.4 நிதிக் கூற்றுக்கள் பற்றிய முகாமைத்துவத்தினதும் ஆளுகைத் தரப்பினரதும் பொறுப்புக்கள்

இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இந்நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து நியாயமான முறையில் சமர்ப்பித்தலும், மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அற்றவையாக நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதை இயலச்செய்யும் வகையில் தேவைப்படும் உள்ளக கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தலும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது நிறுவகத்தை இடையறாமல் முன்னெடுத்துச் செல்வதற்கான ஆற்றலைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் ஒரு பொறுப்பாகும் என்பதோடு, முகாமைத்துவம் நிறுவகத்தை ஒழிவுக்குட்படுத்தக் கருதுமாயின் அல்லது வேறு மாற்று நடவடிக்கையொன்று இல்லாதவிடத்து செயற்பாடுகளை முடக்க நடவடிக்கை எடுக்குமாயின் ஒழிய, இடையறா வழியுரிமையின் அடிப்படையின் பேரில் கணக்குகளை வைத்தலும், நிறுவகத்தின் இடையறா வழியுரிமைக்குரிய விடயங்களை வெளிப்படுத்துதலும்

முகாமைத்துவத்தின் ஒரு பொறுப்பாகும்.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை சம்பந்தமாக பரிசோதிக்கும் பொறுப்பு, ஆளுகைத் தரப்பினரைச் சாரும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 16(1) இற்கு இணங்க நிறுவகத்தின் ஆண்டுக்குரிய மற்றும் பருவ நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை இயலச் செய்யும் வகையில் தமது வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய ஏடுகளும் அறிக்கைகளும் உரிய முறையில் பேணி வரப்படுதல் வேண்டும்.

1.5 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புடைமை

முழுதும் அளாவிய நிதிக் கூற்றுக்கள், மோசடிகளும் தவறுகளும் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாடொன்றை வழங்குவதும், எனது அபிப்பிராயம் அடங்கிய கணக்காய்வு அறிக்கையை வெளியிடுவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்ட உறுதிப்படுத்தலொன்றாக அமைகின்றபோதும், இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க கணக்காய்வை மேற்கொள்ளும்போது அது எப்பொழுதும் பொருண்மையான பிறழ்கூற்றுக்களை வெளிப்படுத்திக்கொள்ளும் என்பதற்கான உறுதிப்பாடொன்றாக அமையாது. மோசடிகளும் தவறுகளும் தனியான அல்லது கூட்டான பாதிப்பு காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படலாம் என்பதோடு, இந்நிதிக் கூற்றுக்களின் அடிப்படையில் பயனர்களினால் எடுக்கப்படும் பொருளாதாரத் தீர்மானங்களின் மீதான பாதிப்பின் மீது அதன் பொருண்மை தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க என்னால் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வின்போது உயர்தொழில்சார் நியாயித்தலுடனும் உயர்தொழில்சார் ஐயுறவுவாதத்துடனும் செயலாற்றப்பட்டது. மேலும் என்னால் -

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றைப் பெற்றுக் கொள்ளும்போது மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படுவதற்கான ஆபத்துக்களை இனங்காண்பதுடன் மதிப்பீடுசெய்வதற்கு வேளைக்கேற்றவாறான பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிட்டு அமுல்படுத்தப்பட்டன. திரித்துக் காட்டுதல் காரணமாக ஏற்படக்கூடிய, பொருண்மையான பிறழ்கூற்றுக்களினால் ஏற்படக்கூடிய பாதிப்பை விட மோசடியொன்றினால் ஏற்படக்கூடிய பாதிப்பு வன்மையானதாக இருப்பது சூழ்ச்சிசெய்தல், போலி ஆவணங்களைப் புனைதல், திட்டமிட்டு கைவிடுதல், திரித்துக் காட்டுதல் அல்லது உள்ளக கட்டுப்பாடுகளைத் தவறவிடுதல் போன்ற காரணங்களினால் அவை இடம்பெறுவதன் காரணமாகவாகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் பயன்கூர்தன்மை பற்றிய அபிப்பிராயமொன்றை வெளியிடும் நோக்கத்துடன் இல்லாதபோதும், வேளைக்கேற்றவாறு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாடு பற்றிய புரிந்துணர்வு பெற்றுக் கொள்ளப்பட்டது.
- கையாளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் ஏற்றமைவு, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் செய்யப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டது.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் இடையறா வழியுரிமை பற்றிய பொருண்மையான நிச்சமற்ற தன்மையொன்று காணப்படுகின்றதா என்பது சம்பந்தமாக பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையில் கணக்கீட்டுக்காக நிறுவகத்தின் இடையறா வழியுரிமை பற்றிய அடிப்படையைப் பயன்படுத்தும் ஏற்புடைமை தீர்மானிக்கப்பட்டது. போதிய நிச்சயமற்ற தன்மையொன்று காணப்படுவதாக நான் முடிபு செய்வேனாயின், நிதிக் கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்தப்படல் வேண்டும் என்பதோடு, அத்தகைய வெளிப்படுத்தல்கள் போதுமானதாக இருக்கவில்லையெனில், எனது அபிப்பிராயம் மாற்றியமைக்கப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகளின் அல்லது நிலைமைகளின் பேரில் இடையறா வழியுரிமை ஒழிவுறலாம்.

- நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்புக்கும் உள்ளடக்கத்துக்கும் அடிப்படையாக அமைந்த கொடுக்கல்வாங்கல்களும் நிகழ்வுகளும் ஏற்றவாறும் நியாயமானவாறும் நிதிக் கூற்றுக்களில் அடங்கியுள்ளதென்பதும், வெளிப்படுத்தல்கள் அடங்கிய நிதிக் கூற்றுக்களின் முழுதும் அளாவிய சமர்ப்பிப்பும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வின்போது இனங்காணப்பட்ட முக்கிய கணக்காய்வுக் காண்புகள், பிரதான உள்ளக கட்டுப்பாட்டுப் பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் ஆளுகைத் தரப்பினர்களை அறிவுறுத்துகின்றேன்.

2. வேறு சட்ட மற்றும் ஒழுங்குறுத்துகைத் தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் குறித்த விசேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன:-

2.1.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12(அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு இணங்க, கணக்காய்வுக்குத் தேவைப்படும் அனைத்துத் தகவல்களும் விளக்கங்களும் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டதுடன், எனது பரிசோதனையிலிருந்து தோன்றுகின்றவாறு உரிய நிதிசார் அறிக்கைகள் நிறுவகத்தினால் பேணி வரப்பட்டிருந்தன.

2.1.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 6(1)(ஈ)(iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு இணங்க, நிறுவகத்தின் நிதிக் கூற்றுக்கள் கடந்த ஆண்டுடன் ஒத்திசைவானவையாகும்.

2.1.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 6(1)(ஈ)(iv) இல் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு இணங்க, கடந்த ஆண்டில் என்னால் செய்யப்பட்ட விதப்புரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

2.2 பின்பற்றப்பட்ட செயன்முறைகளின் அடிப்படையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றுகளின் அடிப்படையிலும் பொருண்மையான விடயங்களுக்கான மட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு பின்வரும் கூற்றுக்களைத் தெரிவுக்குமளவுக்கு விடயமெதுவும் எனது கவனத்திற்கு உட்படவில்லை:

2.2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12(ஈ) இல் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு இணங்க, நிறுவகத்தின் நிருவாக சபை உறுப்பினரெவருக்கும் நிறுவகத்துடன் சம்பந்தப்பட்ட யாதேனுமோர் ஒப்பந்தம் தொடர்பில் நேரடியாக அல்லது வேறு வகையில் பொதுவான வியாபாரச் சூழலுக்கு அப்பாற்பட்ட

தொடர்பொன்றுள்ளமை.

2.2.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12(ஊ) இல் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு இணங்க, ஏதேனும் ஏற்புடைய எழுத்திலான சட்டமொன்றுடன் அல்லது நிருவாக சபையினால் வெளியிடப்பட்ட வேறு பொதுவான அல்லது விசேட ஏற்பாடுகளுடன் ஒத்திசைவற்ற விதத்தில் செயலாற்றப்பட்டுள்ளமை.

2.2.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12(எ) இல் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டிற்கு இணங்க தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு ஒத்திசைவற்ற விதத்தில் செயலாற்றப்பட்டுள்ளமை.

2.2.4 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12(ஏ) இல் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டிற்கு இணங்க, நிறுவகத்தின் வளங்களை சிக்கனமாகவும் வினைத்திறனுடையதாகவும் பயன்கூர் விதத்திலும் காலவரைகளினுள் ஏற்புடைய சட்டதிட்டங்களுக்கு இணங்க பெறுகைசெய்து பயன்படுத்தியிருக்காமை.

2.3 வேறு விடயங்கள்

(அ) தொழில்நுட்ப நிறுவகம் நிறுவப்பட்டுள்ள காணியை உரிமைமாற்றம் செய்து கொள்வதற்கு ரூ.25,000,000 தொகை 2007 ஆம் ஆண்டில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தப்பட்டிருந்தபோதும், 2009 ஆம் ஆண்டில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திடமிருந்து இக்காணியின் உரித்து நீங்கியுள்ளமையால் செலுத்தப்பட்ட ரூ.25,000,000 தொகை முற்பணம் பொருளாதாரமற்ற ஒரு செலவாகி இருந்தது. மேலும் மீளாய்வு ஆண்டு இறுதிப் பகுதி அளவிலும் இக்காணியின் சட்டரீதியான உரித்து பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தொழில்நுட்ப நிறுவகத்தை வேறிடத்தில் மீள்நிறுவுகை மற்றும் அபிவிருத்திக் கருத்திட்டத்தின் கீழ் 2017 ஆம் ஆண்டில் நிர்மாணப் பணிகளை பூர்த்திசெய்து ஒப்படைக்கப்பட்ட ரூ.8,821,053,785 பெறுமதியான கட்டிடங்களின் பெறுமதியில் காணப்பட்ட மாணவர்களுக்கான 02 விடுதிக் கட்டிடங்களின் 26 அறைகள் வீதம் கொண்ட 02 மாடிகளை நிர்மாணித்தல், நிர்மாணித்த இரண்டு மாடிகளின் அறைகளை ஒதுக்குதல், அந்த 02 கட்டிடங்களின் கூரைகளை அமைத்தல் ஆகிய பணிகள் முற்றாக கைவிடப்பட்டிருந்தன. மேற்படி அறைகளுக்கு வழங்கப்படவிருந்த மரத் தளபாடங்களும் உபகரணங்களும் வழங்கப்படாத நிலையில் பூர்த்திசெய்யப்பட்ட கட்டிடங்களாக முன்னாள் தொழில்நுட்ப நிறுவகத்தினதும் கருத்திட்டத்தினதும் பணிப்பாளரினால் 2017 ஆம் ஆண்டில் நிர்மாணப் பணியை மேற்கொள்ளும் நிறுவனத்திற்கு கையேற்புச் சான்றிதழ்களை வழங்கி கட்டிடங்கள் கையேற்கப்பட்டிருந்தன. கட்டிடங்களை நிறுவகத்திற்கு கையேற்ற 2017 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் வரையிலும் நிர்மாணப் பணி பூர்த்தியடையாத கட்டிடங்களின் கூரைகள் நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லையாதலால், நீண்டகாலமாக காலநிலை நிலைமைகளை எதிர்நோக்கியதன் காரணமாக கட்டிடங்களின் ஏனைய கட்டமைப்பு சார்ந்த பகுதிகளுக்கும் சேதம் ஏற்படக்கூடிய ஆபத்தான நிலை காணப்பட்டது.

(இ) கிரயம் ரூ.205,322,908 ஆகக் காணப்பட்ட கடைத்தொகுதியொன்றும் விருந்தினர் இல்லமொன்றும் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன், கடைத்தொகுதியின் 13 கடைகளில் 05 கடைகள் 2018 ஆம் ஆண்டு முதல் வாடகைக்கு விட முடியாத நிலை காணப்பட்டது.

(ஈ) மொத்தம் ரூ.24,711,780 ஆகவிருந்த 07 நிதியங்கள் 01 வருடம் முதல் 11 வருடம் வரையான காலம் உரிய நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) 2022 திசெம்பர் 31 அன்றுள்ளவாறு 01 வருடத்திற்கும் 02 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலமாகக் காணப்படும் மொத்தம் ரூ.1,251,747 மற்றும் 02 வருடங்களுக்கு கூடுதலான காலம் முதல் காணப்படும் மொத்தம் ரூ.4,967,589 கொண்ட கடன்கொடுநர் மீதிகளைத் தீர்ப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) பாடநெறிகளுக்கு மாணவர்களைத் தெரிவுசெய்தல், தகுதிகாண் பரீட்சைகளுக்கு கட்டணம் செலுத்துவதற்கான முறையான ஒரு திட்டத்தைத் தயாரித்து அனுமதி பெற்றுக்கொள்ளாமல் சுய நிதியீட்ட செயற்பாடுகளுக்கு 2016 மார்ச் 01 ஆம் திகதிய, 04.்.2016 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வெளியிட்ட சுற்றறிக்கைக்கு இணங்க பாடநெறிகளுக்கான விண்ணப்ப வருமானம் தொடர்ச்சியாக ஊழியர்கள் மத்தியில் பகிரப்பட்டிருந்தது. மேலும் 2020 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் வருமானத்தில் ரூ.6,195,437 தொகையை பகிர்வதற்காக நடைமுறைப் பொறுப்புக்களில் காட்டப்பட்டிருந்தது.

(ஒப்பம்)

டப்ளியு.பீ.சி.விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

19. கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கைக்கானபதில்

மொறட்டுவைப் பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவகத்தின் 2022 திசெம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களும், பிற சட்ட மற்றும் ஒழுங்குறுத்துகைத் தேவைப்பாடுகளும் குறித்த 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவிற்கு அமைவான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.

கணக்காய்வு அபிப்பிராயம்	**விளக்கங்கள் ∴ எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்**
	1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்
	2.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை
(அ)தொழில்நுட்ப நிறுவகம் நிறுவப்பட்டுள்ள காணியை உரிமைமாற்றம் செய்து கொள்வதற்கு ரூ.25,000,000 தொகை 2007 ஆம் ஆண்டில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தப்பட்டிருந்தபோதும், 2009 ஆம் ஆண்டில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திடமிருந்து இக்காணியின் உரித்து நீங்கியுள்ளமையால் செலுத்தப்பட்ட ரூ.25,000,000 தொகை முற்பணம் பொருளாதாரமற்ற ஒரு செலவாகி இருந்தது. மேலும் மீளாய்வு ஆண்டு இறுதிப் பகுதி அளவிலும் இக்காணியின் சட்டரீதியான உரித்து பெற்றுக் கொளளப்பட்டிருக்கவில்லை.	**வேறு விடயங்கள்** (அ) குறித்த காணிக்கான பெறுமதி ரூ.175,576,800 என்று செய்யப்பட்ட மதிப்பீட்டின்படி எமது அறிக்கைகளுக்கு ஏற்ப 2017 ஆம் ஆண்டில் அத்தொகையில் 25 மில்லியன் ரூபா குறித்த உரிமைமாற்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு செலுத்தப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை அரசாங்கத்தினால் வழங்கப்படவில்லை. அதன் பின்னர் உயர்கல்வி அமைச்சினாலும் ஏனைய அதிகாரம்பெற்ற நிறுவனங்களினாலும் தொழில்நுட்ப நிறுவகத்தை வேறிடத்தில் மீள நிறுவும் கருத்திட்டத்தின் கீழ் அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்கான இணக்கச் சான்றிதழும் தொழில்நுட்ப நிறுவகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. காணியின் உரித்து, உரிய முறையில் உரிமைமாற்றம் செய்யப்படவில்லை என்ற அவதானிப்பின் பேரில் குறித்த காணியின் நிருணயத்தை மேற்கொண்டு வழங்குமாறு ஹோமாகம பிரதேச செயலாளருக்கு 2022.02.02, 2022.05.06 ஆம் திகதிகளில் கடிதங்கள் மூலம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அதன்படி இது சம்பந்தமாக அனைத்துத் தரப்புகளுடனும் 2022.03.03 ஆம் திகதி கலந்துரையாடலொன்று நடைபெற்றது. காணியின் சட்டரீதியான உரித்து சம்பந்தமாக முன்வைக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளைப் பூர்த்திசெய்து நிறுவகத்திற்கு உரிமைமாற்றம் செய்யுமாறு அறிவித்து 2023.03.13 ஆம் திகதி மீண்டும் ஒரு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கணக்காய்வு அபிப்பிராயம்	விளக்கங்கள் ∴ எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்
	1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்
	2.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை
(ஆ) தொழில்நுட்ப நிறுவகத்தை வேறிடத்தில் மீள்நிறுவுகை மற்றும் அபிவிருத்திக் கருத்திட்டத்தின் கீழ் 2017 ஆம் ஆண்டில் நிர்மாணப் பணிகளை பூர்த்திசெய்து ஒப்படைக்கப்பட்ட ரூ.8,821,053,785 பெறுமதியான கட்டிடங்களின் பெறுமதியில் காணப்பட்ட மாணவர்களுக்கான 02 விடுதிக் கட்டிடங்களின் 26 அறைகள் வீதம் கொண்ட 02 மாடிகளை நிர்மாணித்தல், நிர்மாணித்த இரண்டு மாடிகளின் அறைகளை ஒதுக்குதல், அந்த 02 கட்டிடங்களின் கூரைகளை அமைத்தல் ஆகிய பணிகள் முற்றாக கைவிடப்பட்டிருந்தன. மேற்படி அறைகளுக்கு வழங்கப்படவிருந்த மரத் தளபாடங்களும் உபகரணங்களும் வழங்கப்படாத நிலையில் பூர்த்திசெய்யப்பட்ட கட்டிடங்களாக முன்னாள் தொழில்நுட்ப நிறுவகத்தினதும் கருத்திட்டத்தினதும் பணிப்பாளரினால் 2017 ஆம் ஆண்டில் நிர்மாணப் பணியை மேற்கொள்ளும் நிறுவனத்திற்கு கையேற்புச் சான்றிதழ்களை வழங்கி கட்டிடங்கள் கையேற்கப்பட்டிருந்தன. கட்டிடங்களை நிறுவகத்திற்கு கையேற்ற 2017 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் வரையிலும் நிர்மாணப் பணி பூர்த்தியடையாத கட்டிடங்களின் கூரைகள் நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லையாதலால், நீண்டகாலமாக காலநிலை நிலைமைகளை எதிர்நோக்கியதன் காரணமாக கட்டிடங்களின் ஏனைய கட்டமைப்பு சார்ந்த பகுதிகளுக்கும் சேதம் ஏற்படக்கூடிய ஆபத்தான நிலை காணப்பட்டது	(ஆ) உயர்கல்வி அமைச்சினால் தொழில்நுட்ப நிறுவகத்தை மீளநிறுவுதல் மற்றும் அபிவிருத்தி செய்யும் கருத்திட்டத்தின் கீழ் இந்நிறுவகத்திற்கு உரிய அனைத்து நிர்மாணப் பணிகளையும் மேற்கொண்டு 2017 ஆம் ஆண்டில் கையளிக்கப்பட்டுள்ளது. குறித்த விடுதிக் கட்டிடத் தொகுதியின் முழுமை அடையாத நிர்மாண வேலைகள் (பு மற்றும் ர் விடுதிகள்) குறித்து 2020.12.01 ஆம் திகதி நிறுவகத்தின் திட்டமிடல் மற்றும் அபிவிருத்திக் குழுவினால் அன்றைய தகுதிவாய்ந்த அதிகாரிக்கு அறிவிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் தகுதிவாய்ந்த அதிகாரி அது குறித்து உரிய ஒப்பந்தக்காரருக்கு அறிவித்தார். குறித்த ஒப்பந்தக்காரர் அது சம்பந்தமாக எந்தவொரு பதிலையும் அளிக்கவில்லை. இந்த முழுமை அடையாத நிர்மாண வேலைகள் சம்பந்தமாக அமைச்சின் செயலாளருக்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஊடாக 2021.05.03 ஆம் திகதி புதிய பணிப்பாளரினால் அறிவிக்கப்பட்டது. அக்கடிதத்திற்குரிய பதிலாக அமைச்சின் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திப் பிரிவின் பணிப்பாளர் 2021.07.06 ஆம் திகதி கடிதமொன்றை அனுப்பிவைத்து இக்கருத் திட்டத்திற்கான கொடுப்பனவுகள் அனைத்தையும் இக்கருத்திட்டத்தின் பணிப்பாளரே அத்தாட்சிப்படுத்தினார் என்றும், அவர்கள் அடங்கலான ஜவெநசயெவழையெட ஊழுளெவசரஉவழைெ ஊழுளெழசவரைஅ (ீஎவ) டுவன (ஜஊஊ) உடன் கலந்துரையாடி தீர்மானமொன்றுக்கு வருமாறும் அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், இப்பிரச்சினை நிறுவகத்தின் முகாமைத்துவக் குழுவுக்கு முன்வைக்கப்பட்டதோடு அமைச்சு மட்டத்தில் கலந்துரையாடலை நடாத்துவதற்கான கோரிக்கையை முன்வைப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டது. 2021.12.01 ஆம் திகதி அது குறித்து அப்பணிப்பாளருக்கு அறிவிக்கப்பட்டது. அக்கடிதத்திற்கு உரிய பதில் கிடைக்கவில்லை என்பதோடு 2022.01.10 ஆம் திகதி அமைச்சு மட்டத்தில் அக்கலந்துரையாடலை நடாத்துமாறு மீண்டும் பணிப்பாளரினால் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஊடாக உயர்கல்வி அமைச்சின் செயலாளரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது. அக்கடிதத்திற்கு உரிய பதிலாக 2022.01.26 ஆம் திகதி உயர்கல்வி அமைச்சின் உட்கட்டமைப்பு

	வசதிகள் அபிவிருத்திப் பிரிவின் பணிப்பாளரினால் முழுமை அடையாத வேலைகள் குறித்தும் ஒப்பந்தத்தின் நோக்கெல்லை குறித்தும் தொழில்நுட்ப நிறுவகத்தின் பணிப்பாளரை அறிவுறுத்தி மீண்டும் அவருக்கு அறிக்கையிடுமாறு அறிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி 2022.02.10 ஆம் திகதி ஐஊஊ நிறுவனத்திற்கும் தொழில்நுட்ப நிறுவகத்தின் பணிப்பாளருக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது கருத்திட்டத்தின் நோக்கெல்லையைக் குறைத்தல் அல்லது மாற்றுதல், கருத்திட்டக் குழுவுக்கும் ஐஊஊ நிறுவனத்திற்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தப்படி மேற்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. எனினும் மேற்சொன்ன புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு அல்லது கருத்திட்டத்தின் நோக்கெல்லையை மாற்றுவதற்கு முறைப்படி அனுமதி வழங்கப்பட்டிருக்கவில்லை. 2022.03.30 ஆம் திகதி கல்வி அமைச்சின் செயலாளருக்கு இவ்விடயங்கள் குறித்து அறிவிக்கப்பட்டது. இது சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து எமது நிறுவனத்திற்கு இதுவரை அறிவிக்கப்படவில்லை. இருப்பினும், இது சம்பந்தமாக நிறுவன மட்டத்தில் எடுக்கப்படக்கூடிய நடவடிக்கைகள் உள்ளனவா என்பது குறித்து ஆராய்வதற்கு முகாமைத்துவ சபை உறுப்பினர்கள் அடங்கிய ஒரு குழுவும் நியமிக்கப்பட்டுள்ளது.
(இ) கிரயம் ரூ.205,322,908 ஆகக் காணப்பட்ட கடைத்தொகுதியொன்றும் விருந்தினர் இல்லமொன்றும் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன், கடைத்தொகுதியின் 13 கடைகளில் 05 கடைகள் 2018 ஆம் ஆண்டு முதல் வாடகைக்கு விட முடியாத நிலை காணப்பட்டது (ஈ) மொத்தம் ரூ.24,711,780 ஆகவிருந்த 07 நிதியங்கள் 01 வருடம் முதல் 11 வருடம் வரையான காலம் உரிய நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.	(இ) குறித்த கடைத்தொகுதியிலுள்ள கடைகளைப் பராமரிப்பதற்கு விளம்பரங்களைப் பிரசுரித்தும் கொவிட்-19 பெருந்தொற்று நிலைமை போன்றே பொருளாதார நெருக்கடி காரணமாக வாங்குநர்கள் முன்வரவில்லை என்பது தொடர்ச்சியாக அவதானிக்கப்படுகிறது. அவ்வப்போது முன்வந்த வாங்குநர்களும் தாம் பொருளாதார பயனாளிகள் அல்லர் எனத் தெரிவித்து அறைகளைப் பராமரிப்பதிலிருந்து விலகி வருகின்றனர். இலங்கை வங்கி, காகில்ஸ் நிறுவனம், பெரேரா அன்ட் சன்ஸ் போன்ற மிகவும் வெற்றிகரமான தொழில் முனைவோருக்கு தொடர்ச்சியாக தொழில் முயற்சிகளை நடாத்தி வருவருடன், ஏனைய கடைகளுக்கும் பொருத்தமான விண்ணப்பதாரிகளைக் கண்டுபிடிப்பதற்கு நிறுவகம் தொடர்ச்சியாக நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. (ஈ) தங்களினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள நிதியங்கள் சம்பந்தமாக 1 வருடம் முதல் 11 வருடங்கள் வரையான காலக்கெடுவுக்குள் குறித்த நிதியங்களைப் பயன்படுத்த அந்திதியங்களை நிறுவியுள்ள பிரிவுகளிடமிருந்து விண்ணப்பங்கள் கிடைக்கவில்லை. நிறுவப்பட்டுள்ள பணிக்கு அப்பால் அவற்றைப் பயன்படுத்த முடியாதென்பதால் அவ்வாறு இடம்பெற்றுள்ளது.

(உ) 2022 திசெம்பர் 31 அன்றுள்ளவாறு 01 வருடத்திற்கும் 02 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலமாகக் காணப்படும் மொத்தம் ரூ.1,251,747 மற்றும் 02 வருடங்களுக்கு கூடுதலான காலம் முதல் காணப்படும் மொத்தம் ரூ.4,967,589 கொண்ட கடன்கொடுநர் மீதிகளைத் தீர்ப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை	(உ) தங்களினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள கடன்கொடுநர் மீதிகளை தீர்ப்பதற்கு நிறுவகம் வசம் போதிய அளவு பணமில்லை என்பதை அறிவிக்க விரும்புகின்றேன்.

கணக்காய்வு அபிப்பிராயம்	விளக்கங்கள் ∴ எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்
	1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்
	2.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை
(ஊ) பாடநெறிகளுக்கு மாணவர்களைத் தெரிவுசெய்தல், தகுதிகாண் பரீட்சைகளுக்கு கட்டணம் செலுத்துவதற்கான முறையான ஒரு திட்டத்தைத் தயாரித்து அனுமதி பெற்றுக்கொள்ளாமல் சுய நிதியீட்ட செயற்பாடுகளுக்கு 2016 மார்ச் 01 ஆம் திகதிய, 04∴2016 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வெளியிட்ட சுற்றறிக்கைக்கு இணங்க பாடநெறிகளுக்கான விண்ணப்ப வருமானம் தொடர்ச்சியாக ஊழியர்கள் மத்தியில் பகிரப்பட்டிருந்தது. மேலும் 2020 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் வருமானத்தில் ரூ.6,195,437 தொகையை பகிர்வதற்காக நடைமுறைப் பொறுப்புக்களில் காட்டப்பட்டிருந்தது	(ஊ) தொழில்நுட்ப நிறுவகத்தின் நடப்பொழுங்கின்படி தொழில்நுட்பப் பாடநெறிக்காக ஆணைக்குழுவின் சம்மதத்துடன் மாணவர்களைத் தெரிவுசெய்யும் அதிகாரம் நிறுவகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் மாணவர்கள் தெரிவுசெய்து வழங்கப்படுவதில்லையாதலால், பொருத்தமான அபேட்சகர்கள் நிறுவகத்தினால் தெரிவுசெய்யப்பட வேண்டும். மாணவர்களைத் தெரிவுசெய்தல் சம்பந்தமான அளவுகோல்கள் வழங்கப்படவில்லை என்பதோடு, னுேவு பாடநெறிக்கு ஏனைய பல்கலைக்கழகங்களும் திறன் அடிப்படையும் மாவட்ட ஆட்சேர்ப்பு அடிப்படையும் பாதுகாக்கப்படுகின்றவாறு மாணவர்கள் தெரிவுசெய்யப்பட வேண்டும் என்பதற்கான நிருவாக அளவுகோல் ஒன்றின் பேரில் மாணவர்கள் தெரிவுசெய்யப்படுகின்றனர். 3 வருட கால உயர்தர வகுப்பு பெறுபேறுகளின் அடிப்படையில் விண்ணப்பிக்கும் சுமார் 4,500 மாணவர்களின் விண்ணப்பங்களைப் பரீட்சித்து பிழையற்ற தன்மையை உறுதிசெய்துகொண்டு பொருத்தமான விண்ணப்பதாரிகளுக்கு தெரிவுப் பரீட்சைகளை நடாத்தி அதன் பெறுபேறுகளின் அடிப்படையில் உயர்தர வகுப்பு வெட்டுப் புள்ளிகளையும் மாவட்ட திறனையும் பரிசீலித்து, சில பாடநெறிகளுக்கு மருத்துவப் பரிசோதனைச் சபையை நியமித்து நேர்முகப் பரீட்சைகளின் மூலம் தகுதியானவர்கள் தெரிவுசெய்யப்படுவதை சில மாதங்களினுள் பூர்த்திசெய்ய வேண்டியுள்ளது. இணைத்துக் கொள்ளப்பட்ட விண்ணப்பதாரிகளின் தகவல்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அறிக்கையிடப்படவும் வேண்டும். முழுதளவிலான நிருவாகப் பணியொன்றான மேற்சொன்ன நடவடிக்கைக்கு நிறுவகம் வசம் மாணவர் அனுமதித்தல் அலகொன்று (யுனஅளைளழைெ ருெவை) நிறுவப்படவில்லையாதலால், மேற்சொன்ன கருமங்கள் கற்கை மற்றும் மாணவர் அலுவல்கள் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன. மாணவர் அனுமதித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளல், உணவுச்சாலைகளையும் ஏனைய நலன்புரிச் சேவைகளையும் பராமரித்தல், மாணவர்களின் விடுதி நடவடிக்கைகள், மஹாபொல மற்றும் மாணவர் உதவித் திட்டங்கள் போன்ற அனைத்து நடவடிக்கைகளும் ஒப்படைக்கப்பட்டுள்ள இப்பிரிவிற்கு முகாமைத்துவ உதவியாளர்கள் இருவர் மாத்திரமே இணைக்கப்பட்டுள்ளனர். ஆகையால், பாடநெறிகளுக்குத் தகுதியானவர்களைத் தெரிவுசெய்வதற்கு விண்ணப்பம் கோரல், விண்ணப்பங்களைப் பரீட்சித்தல், உறுதிசெய்தல்,

	ஆவணப்படுத்தல், ஆட்சேர்ப்புக்குரிய பரீட்சைகளை நடாத்துதல், விடைத்தாள்களை பரீட்சித்தல், மாவட்ட அடிப்படை மற்றும் திறன் அடிப்படையைக் கருத்திற்கொண்டு 3 வருடங்களுக்கு வெவ்வேறான விகிதாசார முறைகளின் அடிப்படையில் மாணவர்களைத் தெரிவுசெய்தலும் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளும் வேறு முறைகளில் மேற்கொள்ளப்பட வேண்டுமென நிறுவகம் திருப்தியடைந்துள்ளது. அதன்படி நிறுவகத்தின் கற்கை, நிருவாக மற்றும் கல்விசாரா ஊழியர்களின் பங்கேற்புடன் அவர்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைகளுக்கு மேலதிகமாக இப்பணி நிறைவேற்றிக் கொள்ளப்படுவதுடன், இதற்காக அரசாங்கத்தின் அனுமதித்த பணத்திலிருந்து மேலதிக நேரம் அல்து ஏனைய படிகள் செலுத்தப்படுவதில்லை. ஆட்சேர்ப்புக்கான பரீட்சைகளுக்கு விண்ணப்பதாரிகளினால் செலுத்தப்படும் பணம் மாத்திரம் பயன்படுத்தப்படுகிறது. இவ்வாறு மேலதிக சேவைகளுக்கான கொடுப்பனவுகளுக்கு உரிய பணம் மாத்திரம் நடைமுறைப் பொறுப்புகளில் காட்டப்பட்டுள்ளது. இது எவ்விதத்திலும் சுய நிதியீட்ட நடவடிக்கையொன்றாக அடையாளம் காணப்படவில்லை என்பதுடன், அதன் பல்வேறு நிதியங்களுக்கான (உதாரணம்: பணிப்பாளர் நிதியம்) ஒதுக்கீடுகளுக்கு மாத்திரம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை இல. 04.׃.2016 இல் சதவீதங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.